(6 pages) **Reg. No. :**

**Code No. : 5632** **Sub. Code : KTLM 31**

M.A. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2017.

Third Semester

தமிழ்

காப்பிய இலக்கியம்

(For those who joined in July 2016 and afterwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பட்டினி நோன்பிகள் அனைவருக்கும் விருந்து உணவு அளித்தவன் யார்?

(அ) இராகுலன் (ஆ) காஞ்சனன்

(இ) எட்டிசாயலன் (ஈ) சாதுவன்

2. வாசந்தவை என்ற பெயர் இடம் பெறும் காப்பியம்

(அ) சீவக சிந்தாமணி (ஆ) சிலப்பதிகாரம்

(இ) மணிமேகலை (ஈ) கந்த புராணம்

3. சீவகன் சென்று அடைந்த மலையின் பெயர் என்ன?

(அ) சந்திரோதயம் (ஆ) அரணபாதம்

(இ) வனகிரி (ஈ) சித்திர கூடம்

4. மாசு சேர்ந்த முடையுடலார் யார்?

(அ) சைனர்கள் (ஆ) சமணர்கள்

(இ) பௌத்தர்கள் (ஈ) தண்டியடிகள்

5. சிவனின் நெற்றிக்கண்ணில் தோன்றிய தீப்பொறிகள் எத்தனை?

(அ) ஐந்து (ஆ) நான்கு

(இ) ஆறு (ஈ) மூன்று

6. தேம்பாவணியில் இடம் பெறும் நாடு எது?

(அ) யூதேயா (ஆ) எகிப்து

(இ) சிரியா (ஈ) கிரேக்கம்

7. ருசியமுக பர்வதத்தில் நெடுங்காலம் வாழ்ந்திருந்த பெண் யார்?

(அ) தாடகை (ஆ) அஞ்சனை

(இ) சவரி (ஈ) சூர்ப்பனகை

8. சந்திரகாசம் என்பது

(அ) சோலை (ஆ) வாள்

(இ) ஒரு பெண் (ஈ) இசைக்கருவி



Nesamony Memorial Christian College, Marthandam

9. அபித்தாலிப்பின் சகோதரர்

(அ) ஹம்சா (ஆ) குவைலித்

(இ) அப்துல்லா (ஈ) மைசறா

10. வேல் விழியால் என்தன் விலாப்புறத்தைக் கொத்தாதே பால் போல் மொழியால் பதைக்க உயிர் வாங்காதே - யார் கூற்று

(அ) அமுதவல்லி (ஆ) மன்னன்

(இ) அமைச்சன் (ஈ) உதாரன்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) எட்டிச் சாயலன் யார்? அவனால் உணர்த்தப்படும் கருத்து யாது?

(அல்லது)

(ஆ) மணிமேகலை, உதய குமாரனின் முற்பிறப்புச் செய்திகளை எழுதுக.

12. (அ) சீவகன் மலையில் வேடனுக்கு கூறிய அறிவுரையை விளக்குக.

(அல்லது)

(ஆ) தண்டியடிகள் செய்த கோயில் திருப்பணிகள் குறித்து எழுதுக.



13. (அ) அநீதி அதிகரிக்கும் போது ஆண்டவன் அவதாரம் எடுப்பான் என்பதைக் கந்தபுராணம் மூலம் விளக்குக.

(அல்லது)

(ஆ) அனுமப் படலம் சுக்ரீவன் அடைந்த துன்பங்களை எங்ஙனம் எடுத்துரைக்கிறது?

14. (அ) எருசலேம் நகரத்தில் உள்ள பயிற்சி சாலைகளை விவரி.

(அல்லது)

(ஆ) கதிஜா நாயகம் கண்ட கனவிற்குரிய பொருளைத் தருக.

15. (அ) சரியாத வருவாய் உடைய நாடாக இந்த நாட்டை மாற்றித் தந்தவர்கள் யார் என்பதை புரட்சிக்கவி வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) வாலியின் சொல்லாட்சிக்குச் சில எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.



Nesamony Memorial Christian College, Marthandam

## பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் கட்டுரை வடிவில் விடை தருக.

16. (அ) காப்பியங்களின் வடிவம் உத்திகளில் காலங்களுக்கு ஏற்ப ஏற்பட்டுள்ள மாற்றங்களை விவரி.

(அல்லது)

(ஆ) நும்பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள காப்பியம் ஒன்றில் காணப்படும் பெருங்காப்பியக் கூறுகள் பற்றி ஆராய்க.

17. (அ) சிலப்பதிகாரத்தில் வழக்குரை காதை பெறும் இடத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) ணிமேகலை காப்பியத்தில் சிறை விடு காதை உணர்த்தும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

18. (அ) உறுப்புக் குறை ஒரு குறையல்ல என்பதைத் தண்டியடிகள் புராணம் கொண்டு நிறுவுக.

(அல்லது)

(ஆ) 'சிறியன சிந்தியாதவன் அனுமன்' என்பதை அனுமப் படலம் வழி ஆராய்க.



19. (அ) தேம்பாவணி கூறும் எருசலேம் நகரத்து ஆலய வருணனையை விவரி.

(அல்லது)

(ஆ) மணப்பொருத்துப் படலத்தின் சிறப்புக் கூறுகளை ஆராய்க.

20. (அ) எழுத்தால் நாட்டைச் சீர்திருத்தவந்த சீர்திருத்த ஏந்தல் பாவேந்தர் பாரதிதாசன் என்பதை புரட்சிக்கவி கொண்டு நிறுவுக.

(அல்லது)

(ஆ) வாலிக்கு நிகர் வாலியே என்பதையே அவரது அவதாரபுருஷன் வழி நிறுவுக.

---



*Nesamony Memorial Christian College, Marthandam*